9

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 14. | MARCH—APRIL 1952. | No. 3-4

श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
...लावती कवीन्द्रवर्णिता परं
...ा विभातु वैद्यचंद्रिका॥

...: நாராயணய்யங்கார், ...
...ண்டி: P. S. ...

3L
N52-14-3-4
199599

தொகையை ...
...ளக்களித்துள்ளார்கள்.

கோட்டக்கல்

ஆர்ய வைத்தியசாலையின்

மருந்துகள் எல்லா வித வியாதிகளையும் பூர்ண குணப்படுத்துவதுடன், வைத்தியர்களின் கீர்த்தியையும் பாதுகாக்கிறது.

எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள் எங்கள் தலைமை வைத்யர்

P. M. வாரியரை

நேராகவோ, தபால் மூலமாகவோ

யோஜனை கேட்டு பலன் அடையலாம்

நரஸிம்ம ரஸாயனம், க்ஷீரபலா

முதலிய மருந்துகளின் சிறப்பு நிகரற்றது.

எங்கள்

"பாடாதி சூரணம்"

பல்லின் இகறில் சீ வருவது, ரத்தம் வருவது. அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது. முதலிய பல் இகற் சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும் இகறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூர்ணத்தை தேனில் கட்டியாகக் குழைத்து இகறிலும், பல்லிலும் தடவி அழுத்தி தேய்த்து சிறிது நேரம் கழித்து வென்னீரினல் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்பொழுதும் இருப்பார்கள்.

Manager,

Arya Vaidyasala, Kottakal P. O.,

S. [illegible]

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	வைத்திய சந்திரிகை	1
2.	ஈசல் கட்டியினல் சுவாஸரோகம்	3
3.	17வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாசம்மேளனத்தின் வரவேற்புக்கமிட்டி தலைவர் சொற்பொழிவு	8
4.	மஹாநாட்டில் டாக்டர் நாயுடுவின் திறப்புரை	11
5.	கோட்டக்கல் மாதவ வாரியார் சொற்பொழிவு	13
6.	17-வது ஆயுர்வேத மஹாஸம்மேளனம்	19
7.	தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் 1950-52 வருஷங்களின் கார்யக்ரம யாதாஸ்து	21
8.	17-வது ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தில் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்	26

வைத்திய சந்திரிகை.

நமது மஹாமண்டலத்தின் 17-வது ஸம்மேளனத்தில் கலந்து கொண்ட பல அங்கத்தினர்கள் மஹாமண்டலத்தின் பிரசாரத்திற்குப் பூர்ண வலிவூட்ட, இன்றியமையாத ஸாதனமான நமது பத்திரிகையின் அமைப்பையும், விஷயங்களையும் இன்னமும் கவர்ச்சிகரமாக்கி அதன் மூலம் சந்தாதார்களையும், அங்கத்தினர்களையும் பெருக்கவேண்டுமென்ற யோசனையை வெளியிட்டார்கள். மஹாமண்டலத்தின் தற்போதைய நிதி நிலைமை வைத்திய சந்திரிகையில் தற்போதைய நிர்வாஹத்திற்கே போதாத நிலையில் இருப்பதைக்கண்ட ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்தசர்மா போன்ற நண்பர்கள் அதற்குத் தேவையான நிதி திரட்ட கீழ்கண்ட யோஜனையை வெளியிட்டார்கள். அதாவது ஒவ்வொரு வைத்யரும் தனது மஹாமண்டல அங்கத்தினர் சந்தாத் தொகையைத் தவிற தன்னுலியன்றவரை நன்கொடை மூன்று வருஷங்கள் வரை கொடுக்கவேண்டுமென்றும், சுமார் 1500 ரூபாய்கள் வரை இவ்விதம் வைத்திய சந்திரிகைக்காக விசேஷ நிதி திரட்டவேண்டுமென்றும் தெரிவித்தனர். இவ்வேண்டுகோளுக்கிணங்கி கீழ்கண்ட வைத்ய நண்பர்கள் மூன்று வருஷங்களுக்கு வருஷம் தோறும் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வைத்ய சந்திரிகை விசேஷ நிதிக்கு அளிப்பதாக வாக்களித்துள்ளார்கள்.

ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா, கும்பகோணம்	ரூ.	101-0-0
ஸ்ரீ S. V, ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி	ரூ.	51-0-0
ஸ்ரீ P. K. ராமையா சாஸ்திரி, புதுக்கோட்டை	ரூ.	51-0-0
ஸ்ரீ T. S ஸ்ரீனிவாஸ அய்யர், மாயவரம்	ரூ.	51-0-0
ஸ்ரீ R. V. ராமய்யர், கரூர்	ரூ.	51-0-0
ஸ்ரீ சிவஸுப்பிரமண்ய அய்யர், மன்னார்குடி	ரூ.	25-0-0
ஸ்ரீ D. ஸ்ரீனிவாஸ அய்யர், ராமேசுவரம்	ரூ.	25-0-0
ஸ்ரீ S. வெங்கடராஜ அய்யர், தஞ்சை	ரூ.	25-0-0

இந்நண்பர்களுக்கு மஹாமண்டலம் தனது ஹிருதயபூர்வமான நன்றியை அறிவிக்கின்றது. இந்நண்பர்களின் முயற்சி யாவரும் வரவேற்பார்கள். அவரவர்கள் சக்தியை அனுஸரித்து இயன்ற அளவில் நன்கொடை அளித்தால் வைத்ய சந்திரிகையை மூன்று வருஷங்களுக்குள் பிறர் உதவி அதிகமின்றி தனித்து நடத்த முடியும். வைத்திய சந்திரிகையின் சீரமைப்பில் பத்திரிகையும் வைத்தியர்களுக்கு நன்கு உதவியளிக்கும். ஆகலால் எல்லா நண்பர்களும் வைத்ய சந்திரிகை விசேஷ நிதிக்கு நன்கொடையாக தங்களுக்கு இயன்றவரை பெருந்தொகைகளை அனுப்பி ஆதரவளிக்கக் கோருகின்றேன்.

S V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
பொதுக்காரியதர்சி. த. ஆ. மஹாமண்டலம்.

17-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹா சம்மேளனம்.

வரவு சிலவு கணக்கு.

வரவு.				சிலவு.			
பிரதிநிதிக் கட்டணமும் நன்கொடைகளும்	1133	15	3	அச்சடித்தல், ஸ்டேஷனரி தபால்செலவு விளம்பரம்	347	3	9
				பிரயாணச் செலவு	232	15	6
				சாப்பாடு செலவு	390	8	0
				ஸம்மேளன ஹால், அலங்காரம் இடவசதி ஸ்பீக்கர் முதலிய சில்லரை செலவுகள்	163	4	0
ரூ.	1133	15	3	ஆக ரூ.	1133	15	3

தமிழ்நாடு ஆயுர்வேத காப்பக நூலகம்
199599

V. S. கணபதி சாஸ்திரி,
தலைவர்,
வரவேற்புக்கமிட்டி.

P. விசுவநாத சர்மா,
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வரவேற்புக்கமிட்டி
காரியதரிசிகள்.

(19—3—52)

உ

ஈரல் கட்டியினால் சுவாஸரோகம்.

(திருச்சி வைத்ய S. V. ராதாகிருஷண சாஸ்திரி.)

உள் வித்ரதி, வெளி வித்ரதி என இருவகைப்படும் வித்ரதி ரோகத்தில் உள் வித்ரதியின் பிரிவுகளைக் குறிப்பிடுமிடத்து மண்ணீரலிலும் கல்லீரலிலும் வித்ரதி ஏற்பட்டால் சுவாஸம் உள் இழுப்பதில் சிரமமும், சுவாஸத்தை நீண்டு இழுத்தால் வலியும், சுவாஸத்தின் நீளம் குறைந்து சிறுமூச்சு விடுவதும் குறியாகக் குறிப்பிடப்படுகின்றன. இவ்விதம் வித்ரதியில் ஏற்படும் சுவாஸத்தைப்பற்றியும், சிகித்ஸை முறையைப்பற்றியும் சற்று ஆராய்வோம்

உள் வித்ரதி ஏற்படக்கூடிய காரணங்கள் சரகத்திலும், ஸுச்ருதத்திலும் கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றன. எளிதில் ஜீர்ணமாகாதது, அதிகக்குளிர்ச்சி, அதிகச்சூடு வரட்சி, காய்ந்திருப்பது, விபாகத்தில் புளிப்பாக மாறக்கூடியது பகைமை உள்ளது, தாறுமாறானது, சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாதது, வாத பித்த கபங்களின் நன்னிலைமையைக் கெடுக்கக்கூடியது இக்குணங்களுள்ள ஆகாரத்தைச் சாப்பிடுவது; கெட்டதும், அதிக அளவிலும மத்யம் அருந்துதல்; மலமூத்திரத்தைத் தடைபடுத்துதல், அதிகப்புணர்ச்சி, அதிகத் தேகப்பயிற்சி இவைகளினால் உள்ளவயவங்களில் விதாகம் (காபிதம்—Inflammation) ஏற்பட்டு அவ்வுருப்புகளில் இயங்கும் வாத பித்தகபங்களினால் ரக்தமும் கெடுதி அடைகின்றன. அதனால் அவ்வுருப்புகளில் குல்மம் போன்று கெட்டியாகவும், புற்று போன்று உருவில் பெரியதாகவுமான வித்ரதிகள் (கட்டிகள்) ஏற்படுகின்றன. மிகக் கொடுமையான வலியும் வீக்கமும் ஏற்பட்டு வெகு சீக்கிரத்திலேயே அவை பழுக்கின்றன. சீ பாகம் ஏற்பட்டு ஜ்வரம் முதலிய ஸாதாரண விரணக்கட்டிகளின் குறிகள் காணப்படுகின்றன. இக்கட்டிகள் முக்கியமாக ஹிருதயம், க்லோமம் (Pancreas) மண்ணீரல், கல்லீரல், மூத்திரக் குண்டிக்காய் (Kidney) தொப்புள், துடையிடுப்பு சந்தி, ஆஸனவாய், மூத்திராசயம் (Bladder) இவைகளில் ஏற்படுகின்றன. தொப்புள் துடையிடுப்பு சந்தி இவ்விடங்களிலுள்ள உள் உருப்புகளில் ஏதாவதொன்றில் கட்டி ஏற்படுகின்றது. துடையிடுப்பு சந்தியில் ஏற்படும் உண்டுகவித்ரதியு (Appendicitis யும் இவ்வகைப்பட்டதே இவைகள் பழுத்துவிட்டதையோ, பழுக்காதிருப்பதையோ மற்ற கட்டிகளின் ஆமபக்வ லக்ஷணத்தைக்கொண்டே நான் கண்டுபிடிக்க முடியும்.

ஆனால் இக்கட்டிகளில் வாத பித்த கப தோஷங்களில் ஏதாவது ஒன்று அதிகமாக சீர்கெட்டிருந்தால் ஏற்படும் குறிகள் பின்வருமாறு; வாதத்தினால் வெட்டுவதுபோன்றும் பிளப்பது போன்றும் வலி அதிகமாக இருத்தல்; பித்தத்தால் அதிகமாக எரிச்சலும் சீக்கிரம் பழுத்து விடுவதும்; கபதோஷத்தால் வலி அதிகமாக இல்லாமலும், அருசியும், கனத்திருத்தலும், மெதுவாகப் பழுத்தலும் இவை குணங்களாம். ரக்தத்தின் கெடுதி அதிகமாக இருந்தால் கொப்புளங்களும் எரிச்சலும் ஏற்படும். உள்ளுறுப்புகள் அடிபட்டு விதாஹம் (Inflammation) ஏற்பட்டால் நாவரட்சி ஜ்வரம் போன்றவைகள் அதிமாகத் தென்படும்.

இக்கட்டிகள் உடனேயே வைத்தியம் செய்யப்படவேண்டும். காலதாமதம் கெடுதி விளைவிக்கும். இக்கட்டி கல்லீரலிலோ மண்ணீரலிலோ ஏற்பட்டால் சுவாஸ ரோகம் ஏற்படும் என்ற ஒரு லக்ஷணம் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. மற்றவை ஸாதாரண வித்ரதிக்குள்ளவே.

இதை நவீன வைத்திய முறைப்படி ஆலோசிப்போம். இவ்வித்ரதிகள் பழுக்காத வரை Inflammation எனவும் பழுத்தது Abscess எனவும் கூறப்படுகின்றன. உள் வித்ரதிகளுக்கு ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ள தோஷ தூஷ்யங்களின் கோபம போன்ற ஒரே விதமான காரணத்தைக் கூறாமல் ஒவ்வொரு உள்ளுறுப்புகளில் வரும் கட்டிக்கும் தனித்தனியான பூச்சிகளே காரணம் எனக்கருதுகின்றனர். முக்கியமாக ஹிருதயத்தின் வெளி ஆவரண கலைகளிலும் மாம்ஸ பேசிகளிலும ஏற்படும் கட்டிகள் அணுகிருஷ்டி யந்திரத்தாலும் காணப்பட முடியாத ஆமவாதப்பூச்சி (Rheumatism Virus)களால் ஏற்படுவதாகவும் கல்லீரலில் ஏற்படும் கட்டிக்கு Entamoeba Hystoelytica என்ற பிரவாஹிகை (வயிற்றுக்கடுப்பு) கிருமியும் முக்கியமான காரணம் எனவும் கண்டு பிடித்திருக்கின்றனர். அவர்கள் அபிப்பிராயப்படி பிரவாஹிகையை உண்டாக்கும் கிருமிகள் இருவகைப்படுகின்றன. அவை கழி போன்று நீண்ட உரு உடைய Bacillusம் பிராணி வர்க்கத்தைச் சேர்ந்து ஊரும் குணமுடைய Amoebaவும் ஆகும். இவ்விரு கிருமிகளினால் ஏற்படும் வியாதிகளில் பல விசேஷ மாறுபாடுகள் ஏற்படும்.

முக்கியமாக Amoeba என்ற கிருமியால் ஏற்படும் பிரவாஹிகையில் வியாதி அறவே அழிக்கப்படாவிட்டால் வியாதி குறைந்து போனதாக தெரிந்தாலும் குடலிலுள்ள கிருமிகள் ஊர்ந்து ரஸவாஹினிகள் வழியாக கல்லீரலில் போய் சேர்ந்து கட்டியை உண்டாக்குகின்றது. இவ்வியாதி மேற்கூறிய பிர

வாஹிகைக்குப்பின் சில வாரங்களிலிருந்து சில வருஷங்கள் வரை கூட ஏற்படலாம். அதனால் ஈரலில் கட்டி வந்தவர்களிடம் "உனக்கு எப்பொழுதாவது வயிற்றுக்கடுப்பு ஏற்பட்டுள்ளதா" என்ற கேள்வி ஒவ்வொரு டாக்டராலும் கேட்கப்படும். இக்கட்டியில் முக்கியமான லக்ஷணம் ஈரலிருக்குமிடத்தைத் தொடக்கூட முடியாத வலி. சில சமயம் ஈரல் பெருத்தும் இருக்கும். சில சமயம் ஈரல் கட்டி உள்ளவனுக்கு தனக்கு வயிற்றுக்கடுப்பு வந்தது ஞாபகமில்லாமலிருக்கலாம் ஆனால் மலத்தைப் பரிசோதனை செய்து அதில் அமீபா கிருமிகள் கிடைத்தால் வியாதியை நிச்சயிப்பது எளிதாகின்றது. மேலும் ஜ்வரம் 103 டிகிரி வரை இருக்கும். ஜ்வர வேகம் ஆரம்பிக்கும் பொழுது குளிரும், ஜ்வரம் குறையும் பொழுது வியர்வையும் ஏற்படும் அதனால் மலேரியா போன்ற விஷம ஜ்வரம் எனவோ, ராஜயக்ஷ்மா எனவோ இதில் சந்தேகம் ஏற்படும் ஆனால் முன் பிரவாஹிகை ஏற்பட்டது அல்லது மலத்தில் அமீபா கிடைப்பது, அல்லது உபசய பரீக்ஷை இவைகளால் விஷமஜ்வரம் முதலியவைகள் அல்ல என்று தீர்மானிக்கலாம். உபசய பரீக்ஷை என்பது இமெடின் என்ற இபிகாக்வான்ஹா வேரின் சத்து கொடுக்க வியாதி குறைவதால் அறிந்து கொள்ளுவது. இமெடின் அமீபாவைக் கொலை செய்வதில் நிகரற்றது தற்சமயம ஸ்ரீ சோபரா முதலியவர்களால் வெட்பாலையின் சத்து இமெடினைக் காட்டிலும் அதிக குணமளிப்பதாகக் கருதப்படுகின்றது. இமெடினாலோ வெட்பாலையினாலோ, வியாதி குறைந்தால் ஈரல் கட்டி அமீபாவினால் ஏற்பட்டது என்பது நிச்சயிக்கலாம் என்பதுதான் உபசய பரீக்ஷை.

இவ்வியாதியில் முக்கிய லக்ஷணமாகக் கருதப்படும் சுவாஸம் ஏற்படும் விதத்தை ஆராய்வோம்.

யக்ருத்தின் (கல்லீரல்) மேலும் வலது சுவாஸாசயத்தின் கீழும் நடுவில் தடுப்பாக உள்ள மஹாப்ராசீரபேசி என்ற மாம்ஸ விரிப்புள்ளது இவ்விதம் யக்ருத்திற்கும் வலது சுவாஸ கோசத்திற்குமுள்ள நெருக்கத்தால் மூச்சு விடும்போதும் இழுக்கும்போதும் யக்ருத் மேலும் கீழும் அசைகின்றது. அக்காரணத்தால் ஈரல் குலை கட்டிகளோ வீக்கமோ ஏற்பட்டு வெளியில் யக்ருத தெரியாத சமயத்து சுவாஸத்தை நன்கு இழுக்கவிடச் செய்ய ஈரல்கள் மார்பெலும்புகளின் கீழ் வந்து கைக்கு நன்கு புலன்படும்.

யக்ருத்தின் வீக்கம் யக்ருத்தின் மேல் பாகத்திலுள்ள கோசங்களிலோ, கீழ் பாகத்திலோ ஏற்படலாம். மேல் பாகத்தில் வீக்கம் ஏற்பட்டால் மாம்ஸ விரிப்பில் அவ்வீக்கம் தாக்கி

வலது சுவாஸாசயத்தில் இடித்து அதன் இடத்தைக் குறைக்கின்றது. அதனால் சுவாஸகோசம் மூச்சு இழுக்கும்பொழுது நன்கு விரிய இடையூறும். அவ்விதம் சிரமப்பட்டு இழுத்தால் ஈரலில் அவ்வேகம் தாக்குவதால் வலியும் ஏற்படுகின்றது. அதனால் சுத்தக்காற்று நுரையீரலுள் நுழைவது குறைபடுவதால் அக்குறைவை சரிப்படுத்த சுவாஸம் அடிக்கடி இழுத்துவிட வேண்டி வருகின்றது. இவ்விதம் குட்டையாக சுவாஸம் விட நேருவதால் சுவாஸ ரோகம் ஏற்படுகின்றது.

யகிருத்தின் கீழ் பாகங்களில் வீக்கம் ஏற்பட்டாலும் ஈரல் முழுவதுமே தொட முடியாத வலி (Tenderness) ஏற்படுவதால், சுவாஸாசயத்தின் பூர்ண விரிவு மிகுந்த வேதனையளிக்கின்றது. அதனால் ஆழ்ந்த சுவாஸம் இழுப்பது குறைவதுடன் சுவாஸத்தின்போது ஏற்படும் சுவாஸகோசங்களில் இயற்கையான விரிவும் குறைவு படுகின்றது. சுத்த வாயு உள் இருப்பதின் அளவுக்குறைவைச் சீர்படுத்த சுவாஸம் குறைந்த அளவில் குட்டையாக அதிக தடவை விடவேண்டியிருக்கிறது. சுவாஸ வேகம் குறைய சரீரத்திலிருந்து வாயு மூலம் வெளிப்பட வேண்டிய தோஷங்கள் சரீரத்தில் சேமிக்கப்பட்டு மயக்கம் மூளையைத் தாக்கி மீண்டும் அதிக சுவாஸம், முகம் வீங்குதல் போன்ற பல விகாரங்கள் ஏற்படுகின்றன.

இவ்விதம் ஏற்பட்ட ஈரல் கட்டி வெடித்து அமீபா கிளப்பி மாம்ஸ விரிப்பைத் தாக்கி, அதன்வழியாக நுரையீரலினுள்ளும் பாவி உரக்ஷத (Pleurisy) நோயை உண்டாக்குகின்றது. அவ்வியாதிக்கு Contact Pleurisy அல்லது Diaphragmatic Pleurisy எனக்கூறுவார்கள். ஈரல் கட்டியிலிருந்து பரவுவதால் முதல் வயரும் மாம்ஸவிரிப்பிலிருந்து வருவதால் இரண்டாவது வயரும் ஏற்பட்டுள்ளது. உரக்ஷதம் ஏற்பட்டதும் சுவாஸம் அதிகமாவதும், சுவாஸம் விடும்போது வலியும் இயற்கையே.

ஈரல் வீக்கத்தால் நுரையீரலில் இடம் குறைந்துபோவதால் நுரையீரலிலுள்ள வாயு கோசங்கள் குறுகி காலக்கிரமத்தில் ஒன்றுகிவிடுகின்றன. அதனால் மார்பெலும்பின்மேல் தட்டினாலும், ஸ்தெதஸ்கோப் மூலம் பரிக்ஷை செய்தாலும், நுரையீரல் வாயு கோசங்கள் காடிகம் அடைந்து கனமாகியுள்ளது விளங்கும். அத்துடன் கபவாதப்பிரதானமான ஸந்நிபாதஜ்வரம் (Pneumonia) ஏற்படுகின்றது. தனியாகவரும் கபவாத ஸந்நிபாத ஜ்வரத்திற்கும், ஈரல்கட்டியினால் வரும் கப வாத ஸந்நிபாத ஜ்வரத்திற்கும் வேறுபாட்டை ஈரல் காடிதத்தை X ரே பரிக்ஷையினாலும், ஈரலின் மேல் ஏற்படும் பொறுக்கமுடியாத வேதனை

யாலும் கண்டுபிடிக்கலாம். அநேகமாக இந்நோய்களில் கபவாத ஜ்வரம் ஏற்படக்கூடுமாகையால் இதற்கும் முன்கூட்டியே தடுப்பு முறைகளை அநுஷ்டிக்கவேண்டும். இக்கட்டிகள் பழுக்க நாளாகின்றன. வேறுவித தோஷம் ஏற்படாவிடில் சீழும் இதில் உண்டாவதில்லை. சிவந்த குழகுழப்பான ஒருவகை திரவம்தான் இதில் காணலாம்.

முன்கூறிய அமீபாவினால் வரும் கட்டிகளைத்தவிர வேறுவிதமாகவும் கட்டிகள் வரலாம். அவ்வுருப்பிற்கு ஆயுதம் முதலியவைகளின் அடியில் ஏற்பட்ட விரணம் கெட்டு விக்ரதியாவதும், சீழ்வைப்பதும் உண்டு. ஆமாசயம், சிறுகுடல், பெருகுடல் இவைகளில் புண்கள் ஏற்பட்டு அதில் ஏற்படும் தோஷம் ரஸவாஹினிகள் (Portal Veins) வழியாக ஈரலினுள் சென்று ஈரல் கட்டிகளை உண்டாக்குவதும் உண்டு. இம்மாதிரியே ஆகாரத்திலுள்ள தோஷங்களைப் போக்க இயங்கும், ஈரலின் சில பாகங்கள் சக்தி இழந்து கெட்டும் இவ்வியாதி ஏற்படலாம். ஈரலிலுள்ள ரக்தம் கெட்டு சிறு கொப்புளங்கள் ஏற்பட்டு ஈரல் கட்டி ஏற்படுவதும் உண்டு.

இக்கட்டிகள் உடைந்து அதிலிருந்து சீழோ வேறுவித திரவமோ மேல்நோக்கி சுவாஸாசய வழியாகவோ மற்றவிதமாகவோ வர ஆரம்பித்தால் வியாதி அஸாத்திய நிலையை அடைகின்றது. ஆனால் சிறந்த வைத்தியரால் சஸ்திர பிரயோகத்தால் அவ்விக்ரதி சிகித்ஸை செய்யப்பட்டால் ஒருக்கால் பிழைக்கலாம்.

சிகித்ஸை.

வியாதி வருமுன் காப்பதும் வந்தபின்னும் கட்டி பழுப்பதற்கு முன் சிகித்ஸை செய்வதும் எளிது. இவைகளில் வருணாதி கஷாயம், சிலாஜது, குக்குலு, தேவதாரு போன்ற ஸ்ரோதஸ்சோதனமும் விரணரோபணமுமான மருந்துகள் விசேஷித்து வர்த்தமான பிப்பலீ—தாம்ரப்பிரயோகங்கள் சேர்ந்த தாம்ரபர்படீ, விஜய பர்படீ, பஞ்சாமிருத பர்படீ முதலியவைகள் வர்த்தமான கிரமத்தில் சிறந்த பத்திய முறைகளுடன் கொடுப்பது நல்ல குணமளித்து வருகின்றது. குடஜபாணிதம்—வெட்பாலைப்பட்டை விதை சூர்ணம் போன்றதை பிரவாஹிகையினால் ஏற்பட்டவைகளில் சிறந்த அநுபான ஔஷதங்களாகும்.

பழுத்தபின் சஸ்திர சிகித்ஸையும் ஈசுவரனின் கிருபையுமே சரணமடையத்தகுந்தது.

இப்பொழுதுள்ள சாஸ்திரீய முன்னேற்றத்தால் அண்டமே பிண்டமாகிவிட்டது.

जलनिधिः कुल्यायते तत् क्षणात् मेरुस्स्वल्पशिलायते

என்ற கவி வசனங்கள் இன்று உண்மையாகிவிட்டன. இவ்வாறு வெகு சீக்கிரத்தில் வெகு தூரங்கள் போகும் மனிதனுக்கு ஆகாரம், ஔஷதம் முதலியவைகளின் ஸ்வரூபம், அளவு, அவைகளின் பலன்கள் தகுந்தபடி அமைக்கவேண்டிய காலமாக இருக்கிறது.

ஆகையால் இப்பொழுது நம் நாட்டு வைத்திய முறைகளை தற்காலத்திய மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திர பௌதிக சாஸ்திர முறைகளின் முன்னேற்றத்தைக்கொண்டு சீர்திருத்த வேண்டும். நம் தேச ஆரோக்கியத்தையும் சரீர பலத்தையும் வளர்க்கக்கூடியதும், அதேசமயத்தில் சிக்கனமாக இருக்கக் கூடியதுமான ஆகார முறைகளை கண்டுபிடித்து ஜனங்கள் அனுஷ்டிக்கும்படியாகச் செய்யவேண்டும். நம் தேசத்தில் பெரும்பாலர்கள் ஏழைகள். அவர்களுக்கு உதவிசெய்வதுதான் முக்கியம். ஜன சமூகத்தில் தொத்து வியாதிகள் வராதவாறு தடுக்கும் சிகித்ஸை முறைகளுக்கு ஆயுர்வேதம் முதலிய நம் சுதேச முறைகள் நகராட்சி மன்றங்கள், முதலிய ஸகல சுய ஆட்சி நிலயங்களுக்கு எவ்வாறு உதவியளிக்க முடியும் என்பதையும் நீங்கள் சர்ச்சை செய்யவேண்டும்.

உங்களுடைய தொழில் ரொம்ப உயர்வானது. நீங்கள் செய்யும் ஆரோக்ய தானத்தை வெகு கண்யமான தானமாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

நம்நாட்டை இன்று வறுமை, மடமை, பிணி என்ற மூன்று அரக்கர்கள் துன்புறுத்துகிறார்கள். அன்று ஏகசக்ர நகரிலிருந்து பகாஸுரன் என்ற அரக்கனை பீமன் ஸம்ஹாரம் செய்ததுபோல் இன்று இந்த பெரிய உபகண்டமாகிற பாரத தேசத்தில் பலி வாங்கும் இம் மூன்று அரக்கர்களையும் கொல்லவல்ல பல பீமர்கள் வேண்டும். அவ்வாறு பெரும்பணி செய்யக்கூடிய பாக்கியம் உங்களுக்கு கிட்டியிருக்கிறது.

ஆகையால் உங்கள் தொழில் தேசிய ஸேவை. தனம் ஸம்பாதிக்க ஏற்பட்ட தொழிலில் அல்ல. உண்மையில் நம் மூதாதையர் இட்ட திட்டங்கள் எல்லாம் வகுத்தவழியெல்லாம் பணம் சேகரித்தது. சீமான்களாக வேண்டுமென்ற கீழ்ப்பட்ட எண்ணத்துடனல்ல. நம் பெரியோர்கள் எந்த வித்தையும் விருத்திக்காக அதாவது பிழைப்புக்காக கற்கவுமில்லை. பயிலவும்

இல்லை. இம் மேல்நாட்டு நாகரீகம் வந்த பிறகுதான் ஸம்பாதிக்க கற்றது என்ற பழக்கம் வந்திருக்கிறது. நம் தேசம் இருக்கும் சீர்கேடான நிலையில் இன்னும் சுமார் 50 வருஷங்களாவது எல்லா ஆசிரியர்கள், வைத்தியர்கள், வர்த்தகர்கள், என்னைப்போன்ற வக்கீல்கள் எல்லோரும் அவர்களின் தொழிலை தேச க்ஷேமத்திற்கு ஏற்பட்ட பணியாக நினைத்துச்செய்தால்தான் நம் பாரத தேசம் ஸர்வதேச முன்னணியில் நிற்கமுடியும். அப்பொழுதுதான் நம் ஒப்புயர்வற்ற கலாசாரம் உலகத்துக்கு உபயோகப்படும். எக்காரியத்தைச் செய்தாலும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களும் நமக்குச் சித்திக்கவேண்டும் என்ற சங்கல்பத்துடன் நாம் செய்யவேண்டியது நமது கடமை. இது ரொம்ப கடினமான காரியம். இக்காரியத்தில் நம்நாட்டு வைத்திய ஸகோதரர்களும் தேசபக்தியுடன் விழித்து எழுந்து அதிலுள்ள கஷ்டங்களைப் பொருட்படுத்தாது தேசப் பணியைச்செய்து பாரத ஸமுதாயத்தின் ஆயுர் விருத்தியைக் கொடுப்பவர்களாகவும் ஆரோக்கிய தாதாக்களாகவும் விளங்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். இப் பெரிய வேலைக்கு தகுந்த திட்டமிட்டுக் கொடுக்கும்படி நாம் இங்கு வந்திருக்கும் வைத்திய நிபுணர்களை வணக்கத்துடன் பிரார்த்தித்துக்கொண்டு அவர்களுக்கு ஸ்வாகதம் கூறுகிறேன்.

सर्वे जनास्सुखिनो भवन्तु
समस्तसन्मङ्गलानि सन्तु

புதுக்கோட்டை ஆயுர்வேத மஹாநாட்டில்
டாக்டர் நாயுடுவின் திறப்புரை.

இன்று இங்கு கூடிய 17-வது தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாட்டை டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு திறந்து வைத்து நிகழ்த்திய பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

வியாதியைக் குணப்படுத்தும் வழிகளைப் போக்கும் கலை மிகவும் பழமையானது. மனிதனின் சரித்திரம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது இந்தக் கலை. மற்றெல்லாக் கலைகளைப் பார்க்கிலும் இந்தக்கலை மிகவும் முக்கியமானது. இன்றைய உலகில் வைத்தியக்கலை மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது, ஆனால் இந்திய வைத்திய முறையே உலகின் பல்வேறு வைத்திய முறைகள் அனைத்திற்கும் ஊற்றுக்கண்போல அமைந்திருக்கிறது. நமது புராதன ரிஷிகள் பின்பற்றிவந்து நமக்கு தந்துவிட்டுச் சென்றுள்ள வைத்தியக்கலை தற்கால

வைத்திய நிபுணர்களால் நன்கு பாராட்டப்படுகிறது. நமது முறை சாஸ்திரீயப்படி இல்லை என்றும், நாசூக்காக இல்லை என்றும் கூறப்பட்டு வந்துள்ள புகார் ஆதாரமற்றதென்று திறமை வாய்ந்த வைத்திய நிபுணர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்திய வைத்திய முறையின் மதிப்பைப்பற்றியும் அது நமது நாட்டில் லட்சக்கணக்கான மக்களுக்கு அளித்துவரும் நிவாரணத்தைப்பற்றியும் நான் கூற தேவையில்லை. இந்திய முறைப்படி வைத்தியம் செய்துவரும் நம்மவர்களில் பெரும்பாலோருக்கு விஞ்ஞான முறையில் பயிற்சி இல்லை என்பதும், நமது வைத்ய முறை தற்கால நிலைமைக்குத் தகுந்தவாறு பக்குவப்படுத்தப்பட வேண்டும் என்பதும் உண்மையே.

டாக்டர் நாயுடு தனது உரையில் மேலும் கூறினார்-சொஸ்தப்படுத்தும் முறையில் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய விஷயங்களை அனுசரித்து நமது வைத்திய முறை திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியம். மனிதர்கள் அல்லது மிருகங்களின் உடல் சம்பந்தமான உபத்திரவங்களைக் குணப்படுத்தும் எதுவும் வைத்தியக் கலையே. ஆனால் சொஸ்தப்படுத்தும் வழிகள் முறைகள் ஆகியவை எத்தனையோ இருக்கின்றன. ஆகாராதிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமாகக் குணப்படுத்துவது ஒரு முறையாகும், மருந்துச் சரக்குகள் மூலமாகவும், மிருக கொழுப்பு மூலமாகவும் குணப்படுத்துவது மற்றோர் முறையாகும், மின்சாரம் உலோக சத்துணவு, மண், ஜலம் ஆகியவை மூலமாகக் குணப்படுத்துவது மற்றொரு முறையாகும். ஹோமியோபதி முதலிய மற்றச் சாதனங்களும் உண்டு. வைத்தியம் செய்கிறவர்கள் சொஸ்தப்படுத்தும் எத்தனையோ முறைகளில் சில பிரிவுகளையாவது நன்கு தெரிந்து பயிற்சி பெற்றிருக்க வேண்டியது அவசியம். இந்திய வைத்திய முறையில் சிரத்தை உள்ளவர்கள் விஞ்ஞான முறையில் பிரச்னையை அணுகி தற்கால முற்போக்கு நோக்குடன் செயலாற்ற வேண்டும். இந்தியாவில் நமது வைத்திய முறைக்கு முட்டுக்கட்டையாக இருப்பது என்னவென்றால் வைத்திய முறைகளும் பாஷாவாரி அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி ஆகியவற்றில் எது சிறந்தது என்று விவாதிப்பது என் நோக்கமல்ல. இந்த முறைகளில் வேற்றுமைகள் இருக்கலாம். சொத்தில் சிறந்தவற்றை எடுத்துக் கொண்டு நாம் முன்னேறிச் செல்லவேண்டும். சிறிய வேற்றுமைகளுக்காக நாம் தகராறு செய்து கொண்டிருக்கக் கூடாது.

இப்பொழுது வைத்தியர்கள் அதிகமாகத் தேவையிருப்பதால் முன்பு அமலில் இருந்த எல். எம். பி. வைத்தியப் பயிற்சியை மீண்டும் அமல் நடத்துமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் எல். எம். பி. பயிற்சி பெறுகிறவர்கள் இந்திய

வைத்தியமும் படிக்கவேண்டும் என்ற கட்டாயம் இருக்கவேண்டும். இந்திய வைத்திய பயிற்சிதரத்தை உயர்த்தி அதற்கும் மேனாட்டு வைத்திய பயிற்சிகளுக்குமிடையே உள்ள வேற்றுமைகளை ஒழிக்கவேண்டும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தினுடைய
17-வது ஸம்மேளனத்தின் ஆதரவில்
புதுக்கோட்டையில் **10—2—52** ல் நடந்த, சென்னை ராஜ்ய
ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்கள் மஹாநாட்டில்
தலைவர் **கோட்டக்கல் மாதவ வாரியர்**

சொற்பொழிவு.

மதிப்பிற்குரிய நண்பர்களே!

சாதாரண சூழ்நிலையில் ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்களுக்குள்ள கஷ்டங்கள் பல. கடந்த இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. நமது மாகாண அரசாங்கத்தாரால் நமக்கு ஏற்படும் தொல்லைகள் கொஞ்சமல்ல.

புண்ணிய பூமியாகிய நம் நாட்டில் ஆயுர்வேத முறை சாசுவதமாக நிலைத்திருக்க நம்போன்ற மருந்து உற்பத்தியாளர்கள்தான் மற்றவர்களைக் காட்டிலும் அதிகச் சிரமப்படவேண்டும். நமக்கு அடுத்தபடியாகத்தான் வைத்தியர்களுடைய வேலை. ஆயுர்வேதத்தின் எதிர்காலம் உண்மையில் மருந்து உற்பத்தியாளர்களாகிய நம்மைப் பொருத்து இருக்கிறது. ஆங்கில வைத்திய முறை, ஹோமியோபதிக் வைத்திய முறை இவற்றைப் போலல்லாமல் நம் ஆயுர்வேத வைத்ய முறையில் வைத்தியர்கள் பெரும்பான்மையும் தங்களுக்குத் தேவையான மருந்துகளைத் தாங்களே தயாரித்துக்கொள்பவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருப்பதில் நன்மையுமுண்டு, தீமையுமுண்டு. வெற்றிகரமாகத் தொழிலை நடத்துவதற்கு வைத்தியர்கள் தங்களுக்கு வேண்டிய மருந்துகளைத் தாங்களே தயாரித்துக்கொள்வதுதான் சிறந்தது.

ஒரு மருந்தை வெவ்வேறு ஆயுர்வேத வைத்தியர்கள் வெவ்வேறு விதமாகத் தயாரிக்கிறார்கள். தோற்றத்திலும் குணத்திலும், தயாரிக்கும் முறையிலும் அவை வித்தியாசப்படுகின்றன. ஆகையால் வெவ்வேறு பிராந்தியங்களில் இருக்கும் வைத்தியர்களின் கஷ்டங்களும் பலவகைப்பட்டனவாயிருக்கின்றன. ஆகவே நம்முடைய கஷ்டங்களை ஆராய்ந்து அவற்றிற்குத்தகுந்த

பரிகாரங்களைக்கூட நாம் இம்மாதிரி மகாநாடுகளைக் கூட்டி, கலந்து ஆலோசிக்க வேண்டியது அவசியம். ஆகையால் இந்த மருந்து உற்பத்தியாளர் மகாநாட்டை ஏற்பாடுசெய்தவர்களுடைய தீர்க்க தரிசனத்தை நான் மிகவும் பாராட்டுவதுடன், அதற்குத் தலைமை வகிக்க என்னைவிட அதிகமான யோக்யதையுள்ளவர் பலர் இருந்தும் அந்த ஸ்தானத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு, நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மகாநாட்டின் லக்ஷ்ய காரியத்தைக் கவனிப்போம்:— அதாவது, நம்முடைய தற்கால நிலைமை என்ன? நாம் என்ன செய்யவேண்டும்? என்னுடைய அபிப்பிராயங்களில் தவறுகள் இருந்தால் நான் திருத்திக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஆகையால் எல்லோரும் பொறுமையாக நான் சொல்வதை கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் ஆயுர்வேத வைத்ய முறை நிலைத்து முன்னேற்ற மடைந்து கோடிக்கணக்கான மக்களுக்கு உபயோகமுள்ளதாக இருக்க ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் :—(1) வியாதிகளின் சிகித்சைக்காக ஆயுர்வேத சாஸ்திரப்படி தயாரிக்கப்படும் மருந்துகள் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடியும், அனுபவத்தை அனுசரித்தும் குணத்தை யளிக்கக்கூடியவைகளாக இருக்கவேண்டும். (2) மருந்துகளின் குணபாகம், அவற்றின் ருசி, உதாரணம் முதலிய அம்சங்களில் விசேஷ அபிவிருத்தி உண்டாக்கவேண்டும். (3) சாஸ்திரங்களில் கூறப்பட்ட புதிய மருந்துகளை முறைப்படித் தயாரித்தல். (4) வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு தேசங்களில் தயாரிக்கப்படும் ஒரே மருந்து ஒரே விதமான குணபாக முடையதாகச் செய்வதற்கு வேண்டிய ஆராய்ச்சி செய்தல். (5) எல்லா வைத்தியர்களும் ஒன்றுகூடி ஆலோசித்து எல்லோரும் ஒரே வியாதிக்கு ஒரேவிதமான சிறந்த மருந்தையே உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்தல். அதாவது ஒரு இடத்தில் தயார் செய்யப்படும் பஸ்மம் ஒரு குறிப்பிட்ட வியாதியைக் குணப்படுத்த மற்ற தயாரிப்பைக்காட்டிலும் சிறந்ததாகக் காணப் பட்டால் அதையே எல்லா வைத்தியர்களும் உபயோகிக்கும்படி செய்தல். (6) எல்லா வைத்தியர்களும் தொழில் முறையில் நேர்மையுடனும், நாணயத்துடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ளவேண்டும். மட்டமான மருந்துகளை வியாபாரத்திற்கு அனுமதிக்கக்கூடாது.

மேற்கூறிய லக்ஷ்யங்களை அடைவதற்கு நாம் மிகவும் பாடு படவேண்டியதோடு, அதிகத் தியாகமும் செய்யவேண்டும். நம்மில் பலர் சிறந்த மேடைப்பிரசங்கிகள்; ஆனால் காரியத்தில்

சாமர்த்தியக் குறைவுள்ளவர்கள். இந்நிலைமை மாறினால்தான் நாம் முன்னேற முடியும். ஆங்கில வைத்திய முறையிலும் மற்ற வைத்திய முறைகளிலும் பல ஆராய்ச்சிகள் மூலம் புதிய வியாதிகளையும், புதிய சிகித்சை முறைகளையும், புதிய மருந்துகளையும் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் மட்டும் சுயநலத்தால் கட்டுண்டு, ஆராய்ச்சித்துறையில் சிரத்தையின்றி, முன்னேற்ற மடையாமல் இருக்கிறோம். இந்த ரீதியில் நாம் சென்றால், கூடிய சீக்கிரத்தில் நம்முடைய வீழ்ச்சி நிச்சயம். நான் இவ்வாறு உண்மை நிலையை விளக்கிக் கூறியது பலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். என் கடமை என்றெண்ணி உண்மையை மறைக்காமல் கூறினேன். என்னை மன்னிக்கவும்.

(1) ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்களுக்குள்ள முக்கியமான கஷ்டம் சரியான மருந்தைக்கண்டு பிடித்தல். நம்முடைய ஜில்லாவிலேயே பல்வேறு பாகங்களில் ஒரே மருந்து தயாரிப்பதில் வெவ்வேறு மருந்துச் சரக்குகள் உபயோகிக்கப் படுகின்றன. உதாரணமாக 'வாராஹி' என்பதை எடுத்துக் கொள்வோம். சகஸ்ரயோகத்தில் இது 'நிலப்பனை' என்ற பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

“வாராஹியா: கந்தஶோயே பிபது கிருத மிதம்”

“அவணிப்பனை, முஸ்தா”. இது வெட்டை சூதகப்பெருக்கு, நீரிழிவு முதலிய வியாதிகளைக் குணப்படுத்த உபயோகிக்கப்படும் மருந்து. சிலர் அந்த மருந்தைத் தயாரிக்க பன்றி முகத்தைப் போல் நீண்டிருக்கும் பன்றிக்கிழங்கு என்ற ஒரு கிழங்கை உபயோகிக்க வேண்டும் என்கிறார்கள். இது மிகவும் நியாயமாக தோன்றுகிறது. ஆனால் தொன்றுதொட்டு உபயோகத்தில் இருக்கும் ஒரு முறையை மாற்ற வேண்டுமானால், அதனுடைய கெடுதல் நிரூபிக்கப்படுவதுடன், அதற்குப் பதிலாகக் கையாளப் படும் புதிய முறையின் நன்மையும் விளக்கப்படவேண்டும்.

'மஞ்சிஷ்டா' வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக இருக்கிறது. மைசூரிலும், எங்கள் நாட்டிலும் வெவ்வேறு பொருள்கள் சேர்க்கப்படுகின்றன (Kampillam) கம்பில்லம் என்பதற்குப் பால்போன்ற ரசமுள்ள ஒரு சிறு கொடி என்று நாம் சொல்லுகிறோம். அதற்கு மைசூரில் ஒரு சிவப்பு நிறமுள்ள பொடி உபயோகிக்கப்படுகிறது. பின்வரும் ஸ்லோகத்தைக் கவனிக்கவும்.

“ஜீவந்தி மஞ்சிஷ்டா தார்வி கம்பில்லியகம் பயச்ருதம்”

இங்கே யோகத்தில் அர்க்கக்ஷீரம் அல்லது ஸ்னுஹீக்ஷீரம் சொல்லப்பட்டிருப்பதுபோல நாம் கப்பிப் பாலையின் ரஸத்தை

உபயோகிக்கிறோம். வேறு இடங்களில் வேறு பதம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கம்பில்லகம் என்ற ஒரு சிவப்பு பொடியும் பய: என்பதற்கு பசுவின் பாலும் உபயோகிக்கப்படுகின்றன. நிலைமை இவ்வாறு இருக்கும்போது ஒரே பெயருள்ள மருந்து எவ்வளவு சுத்தமாயும், நேர்மையாயும் தயாரிக்கப்பட்டாலும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக அமையாமல், எவ்விதம் ஒரேவிதமாக அமையக்கூடும்? ஆகையால் ஆயுர்வேத சாஸ்திரத்தில் நல்ல பாண்டித்யமுள்ளவர்கள் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு நிறைய சம்பளம் கொடுத்து வேறு கவலைகளில்லாமல் சாஸ்திர ஆராய்ச்சியில் அவர்களுடைய கவனத்தையும் புத்திசாலித்தனத்தையும் செலுத்த வசதியளித்து, சாஸ்திரப்படி எந்த மூல வஸ்துகளைக் கொண்டு எந்த மருந்துகளை எந்த முறையில் தயாரிக்கவேண்டும் என்று நிர்ணயிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, இதைவிட முக்கியமானது மருந்துச்சரக்குகளின் வியாபாரம் தற்பொழுது வியாபாரிகளின் தனி உரிமையாக இருந்து வருவதேயாகும். 'மருந்துச்சரக்கு வியாபாரி ஒருவன் 20 அல்லது 30 தனிச்சரக்குகளை வைத்துக்கொண்டு, வைத்திய உலகத்திலுள்ள எல்லா சரக்குகளிலும் வியாபாரம் செய்துவிடுகிறான்" என்று எங்களுடைய நாட்டில் சொல்வது சகஜம். ஒரு வேளை வெவ்வேறு அளவுகளில் வெட்டி, வெவ்வேறு பெயர் வைத்து விற்றுவிடுகிறார்கள். 'புஷ்கரமூல்' கேட்டால் கொடுக்கிறார்கள்; 'ஸ்ராவணி'யைக் கேட்டால் உடனே அது கொடுக்கப்படுகிறது. எவ்வளவு சுலபமாக எல்லா வகை மூலிகைகளும் தயார் செய்யப்படுகின்றன! இந்த நேர்மையற்ற வியாபார முறையினால்தான் நம்முடைய வைத்திய முறைக்கே கெட்ட பெயர் வந்துவிட்டது. அதற்காக எந்த ஒரு வகுப்பினரையும் நான் குறை கூறவில்லை. சில வியாபாரிகளால் நமக்கு ஏற்பட்டிருக்கும் நன்மையை நாம் மறக்க முடியாது. சில உண்மைகளை மறைப்பதால் அவை மாறுதலடையா. ஆகையால் அவற்றை நான் இங்கு குறிப்பிடுகிறேன். இதற்குப் பரிகாரம் நாம் எல்லோரும் 'பங்குகள்' மூலம் முதல் சேர்த்து மருந்து சரக்குகளின் வியாபாரத்திற்கு ஆயுர்வேத மகாமண்டலத்தின் ஆதரவில் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டும். வைத்தியர்கள் தான் அதில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். நாணயமற்றவர்களுக்கு இடமளிக்கக்கூடாது. நாம் எல்லோரும் அதை ஆதரித்து, அதனால் கிடைக்கும் லாபத்தை மண்டலத்தின் முன்னேற்றத்திற்கு உபயோகித்துக்கொள்ளலாம்.

(2) முன்னாட்களில் ஏராளமாகக் கிடைத்துக்கொண்டிருந்த மருந்துச் சரக்குகள் இப்போது கிடைப்பது துர்லபமா

யிருக்கிறது. இந்நிலைமைக்கு உணவு உற்பத்திக்காக என்று சொல்லி பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டிருப்பது ஓரளவுக்குக் காரணமாயிருக்கலாம் ஆனால் அந்த உணவு உற்பத்தித் திட்டத்தினால் எவ்வளவு தூரம் உணவு நெருக்கடி தீர்ந்திருக்கிறது என்று நம்முடைய சொந்த அனுபவத்திலிருந்தே நாம் அறிவோம். காடுகளை அழித்ததால் உணவு நிலைமை அபிவிருத்தியடையவில்லை என்பதோடல்லாமல், முந்தியைவிட மோசமாகிவிட்டது என்றே சொல்லலாம்.

ஆகையால் உணவு நிலைமையைச் சீர்திருத்த, காடுகளை அழிப்பதைவிட, நிலங்களுக்கு நல்ல உரமிட்டு, சிறந்தமுறையில் விவசாயம் செய்வதே மேலானது; ஆனால் இவ்விஷயம் நம்முடைய உபன்னியாச விஷயத்திற்குப் புறம்பானது பற்றி இத்துடன் நிறுத்திக்கொண்டு, மேலே கவனிப்போம்.

தற்காலத்தில் இயற்கை மூலிகைகள் அபூர்வமாகிவிட்டன. நெல்லிக்காய், வில்வமூலம், குருந்தோட்டி, நன்னாரி முதலியவை மிகவும் அபூர்வமாகவும், அதிகவிலை உள்ளதாகவும் ஆகிவிட்டன. ஆகையால் காடுகளை அழிப்பதற்கும் பதில் புதிய காடுகளை வளர்த்தல் அவசியமென்று தோன்றுகிறது. அதிர்ஷ்டவசமாக சில பெரியோர்கள் காடுகளை அழிப்பதால் நேரக்கூடிய பெரிய நஷ்டத்தையும் அபாயத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லுக்கும் செயலுக்கும் வெகுதூரம். ஆகையால் நாமே நமக்கு வேண்டிய மூலிகைகளை பயிரிட்டுத் தயார் செய்து நியாயமான விலைக்கு எல்லா வைத்தியர்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

(3) மூன்றாவது விஷயம் இவற்றைத் தயார் செய்ய ஏற்படும் செலவு. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மருந்துகளைவிட நம்முடைய மருந்துகளில் பல அதிகவிலையுள்ளவையாயிருப்பது நமக்கே வெட்கமாயிருக்கிறது. விசேஷமாக நெய், எண்ணெய், மிளகு, சுக்கு, திப்பிலி முதலியவை சேர்ந்த மருந்துகளின் விலை மிகவும் அதிகம். யுத்த பயமும் உலகப் பொருளாதார நெருக்கடியுமே இந்நிலைமைக்குக் காரணம் இந்நிலைமையை எவ்வாறு நாம் சமாளிக்கலாம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நமக்குள் ஒற்றுமையுடனும் நேர்மையுடனும் நாம் வேலை செய்தால் ஓரளவு நன்மை ஏற்படும். அதுவரையில் நாமும் மற்றவர்களுடன் சேர்ந்து கஷ்டத்தை அனுபவிக்கவேண்டியதுதான்.

(4) தொடர்ந்த ஆராய்ச்சியின் பயனாய் மருந்துகளின் உற்பத்தி முறைகளை சீர்திருத்தி மருந்துகளின் தரத்தை உயர்த்த

வேண்டும். சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப்பதுபோல ஒரே மூலிகை அல்லது தாதுப் பொருள்,

"ரச, கல்க, சிருத, சீத, பாண்டச்சேதி
ப்ரகல்பனா பஞ்சதைவ கஷாயாஹ்ரம"

மேலே சொல்லப்பட்டவைதான் ஒரு மூலிகையிலிருந்து தயார் செய்யப்படும் முக்கிய மருந்து வகைகள். குவாதங்கள், அரிஷ்டங்கள், ஆஸவங்கள், அர்க்கங்கள், மாத்திரைகள், சூர்ணங்கள், பஸ்திகள் முதலியவை, அவற்றின் உட்பிரிவுகள், குவாதங்கள், புட கஷாயம், கருக்குக் கஷாயம் முதலிய பலவகையாகத் தயார் செய்யப்படுகின்றன. பஸ்மங்கள் தயாரிப்பதிலும், சாதாரண புடம், வாலுகா புடம் என்ற பல முறைகள் உள்ளன. சாஸ்திரத்தை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொன்றின் விசேஷ குணங்களை ஆராய்ந்தறிய வேண்டும். நவீன வைத்ய முறையில் கூறப்படும் விட்டமின் தத்துவத்தை நம்முடைய மருந்துகளின் குண விசேஷங்களுடன் ஒத்திட்டுப் பார்த்து புதிய அடிப்படையில் ஒரு சித்தாந்தத்தை நாம் ஏற்படுத்தலாம். இதையெல்லாம் செய்வதற்கு ஒரு ஆராய்ச்சிசாலை வேண்டும். தென்னிந்திய வைத்தியர்களுக்கென்று ஆயுர்வேத முறைகளில் ஆராய்ச்சி செய்ய ஒரு மத்ய ஆராய்ச்சிசாலை நிறுவப்படவேண்டும். அந்த ஏற்பாட்டினால் உயர்ந்த மருந்துகள் ஜனங்களுக்குக் கிடைக்கும்படியாகவும், ஆயுர்வேதத்தின் பெயரை கெடுக்கும்படியான மட்டரக மருந்துகள் வெளிவராமலும் செய்யலாம். இது சம்பந்தமாகத்தான் நான் ஏற்கனவே வைத்தியர்களின் நேர்மையும் நாணயமும் குறைவாக இருப்பதை மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அவர்களைப்பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் தங்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் ஆயுர்வேத சாஸ்திரத்திற்குமே பெருந் தீங்கிழைத்தவர்களாவார்கள்.

மேலே குறிப்பிட்டிருக்கிறபடி நாம் சில தன்மைகளையுடைய நமக்குள் ஒற்றுமை வேண்டும். தென்னிந்தியாவில் எல்லாவித இந்திய வைத்தியர்களும் ஒரே இனம் என்ற ஒற்றுமையுணர்ச்சியுடன் பொது முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும். அவ்விதமாகத்தான் மேனாட்டார்கள் எந்தத் துறையிலும் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். நாமும் இந்த விஷயத்தில் அவர்களைப் பின்பற்றி, ஒற்றுமையாக முயற்சி செய்து முன்னேற்றம் அடைவோமாக. "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" என்பது மூதோர் வாக்யம். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இன்றேல் தாழ்வுதான்".

சுபமஸ்து.

17-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம்.

நமது மஹாமண்டலத்தின் 17-வது மஹாஸம்மேளனம் புதுக்கோட்டையில் கீழ மூன்றாம் வீதி, ஸாம்பசாமய்யர் கலாசாலையில் மார்ச்சு மாதம் 8, 9, தேதிகளில் நடைபெற்றது. சேலம், தஞ்சை, திருச்சி, மதுரை, வடாற்காடு, ஈரோடு, கேரளம் சென்னை, விஜயவாடா முதலிய இடங்களிலிருந்து சுமார் நூற்றி இருபத்தைந்து அங்கத்தினர்கள் வைத்யர்கள் கூடியிருந்தார்கள். புதுக்கோட்டை நகரப் பிரமுகர்களும் புதுக்கோட்டையிலுள்ள அலோபதி டாக்டர்களும் இதில் கலந்துகொண்டார்கள். மஹாநாட்டிற்கு வந்த எல்லா பிரதிநிதிகளுக்கும் சாப்பாடு வசதியும் தங்க இடவசதியும், வரவேற்புக் கமிட்டியார் திருப்திகரமாக கீழராஜ வீதியிலுள்ள ஒரு பெரும் கட்டிடத்தில் ஏற்பாடு செய்திருந்தனர்.

8—3—52 காலை 8-30 மணிக்கு மஹாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் P. S. ராமசர்மா அவர்கள், புதுக்கோட்டைக்கு நண்பர்களுடன் வந்துசேர்ந்ததும் அன்னாரை பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்று எல்லா நண்பர்களுடனும் மஹாநாட்டுக் கட்டிடத்திற்கு மேளதாளத்துடன் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மஹாநாடு தன்வந்தரி பிரார்த்தனையுடன் ஆரம்பமாகியது. புதுக்கோட்டையில், ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் P. R. சக்ரவர்த்தி அவர்கள் தன்வந்தரிக் கொடியை ஏற்றிவைத்தார்கள். ஸ்ரீமான் P. வரதராஜுலு நாயுடு M. L. A., அவர்கள் மஹாநாட்டைத் திறந்து வைத்தார்கள். வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ V. S. கணபதி சாஸ்திரிகள் அவர்கள் எல்லோரையும் வரவேற்றார். ஸ்ரீமான் ராமசர்மா அவர்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஒரு வரவேற்புப்பத்திரம் வரவேற்புக்கமிட்டி காரியதரிசி ஸ்ரீ P. விசுவநாதன் அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. மஹாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் மொழிவாரியாக வைத்தியத்தைப் பிரித்து போதிப்பதைக் கண்டித்து இந்தியா முழுவதும் ஒரேவித கல்வித் திட்டத்தைப் புகுத்துவது அவசியம் என்பதைக் குறிப்பிட்டார்.

மஹாநாட்டிற்கு காமகோடி பீடாதிபதி அவர்களும், ஸ்வாமி சிவானந்தா அவர்களும் வாழ்த்துச் செய்தியனுப்பியிருந்தனர். பிறகு ஸ்ரீமான் ராமசர்மா அவர்கள் தனது தலைமையுரையை நிகழ்த்தியதும் காலை நிகழ்ச்சிகள் முடிந்தது.

மாலை 2 மணிக்கு சென்னை ராஜ்ய ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர் மஹாநாடு கோட்டக்கல் ஸ்ரீ P. மாதவவாரியார் அவர்கள் (ஆரிய வைத்யசாலை தலைமை வைத்தியர்) தலைமையில் நடைபெற்றது. மைஸூர் ராஜ்ய ஆயுர்வேத இலாகா டைரக்டரும், பெங்களூர் ஜயசாம ராஜேந்திர இன்ஸ்டிட்யூட் ஆப் இந்தியன் மெடிஸின் பிரதான வைத்யருமான ஸ்ரீ Y. பார்த்தநாராயண பண்டிட் அவர்கள் இம் மாஹாநாட்டைத் திறந்து வைத்தார்கள். சென்னை ராஜ்ய ஆயுர்வேத மருந்து உற்பத்தியார் சங்கத்தின் காரியதர்சி ஸ்ரீ பூர்ணசந்திர ராவ் அவர்கள் இச் சங்கத்தின் லக்ஷ்யத்தைப்பற்றிப் பேசினார்கள். ஸுப்ரீம் கோர்டின் தீர்ப்புப்படி ஆஸவாரிஷ்டங்கள் விஷயத்தில் மதுவிலக்கு அமூலை வாபஸ் வாங்க சென்னை சர்க்கார் இதுவரை முன்வராததைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேறின.

அன்றிரவு விஷயாலோசனைக் கூட்டத்தில் மறுநாள் மஹாநாட்டில் கொண்டு வரப்பட வேண்டிய விஷயங்களைப்பற்றியும், மஹா மண்டல வைத்திய சந்திரிகை நிர்வாஹத்தைப்பற்றியும் ஆலோசனை நடந்தது.

9—2—52 காலை சாஸ்திர சர்ச்சைக்கூட்டம் சென்னை வெங்கட்டரமண ஆயுர்வேத கலாசாலை பேராசிரியர் ஸ்ரீ V. S வெங்கடஸுப்பிரமண்ய சாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தைத் துவக்கி வைத்த அண்ணாமலை ஸர்வ கலாசாலை பேராசிரியர் ஸ்ரீ K. A. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் சாஸ்திர ஆராய்ச்சியில் சர்ச்சா பரிஷத்துகளின் ஆவசியத்தை வற்புறுத்திக் கூறினார். மஹாமண்டலத்தால் நடத்தப்பட்ட பிரமேஹம் என்ற விஷயத்தைப்பற்றிய கட்டுரைப் போட்டியில் பரிசு வழங்கத் தகுதியுள்ளதாக நிர்ணயிக்கப்பட்ட கட்டுரைகளை எழுதிய திருச்சி ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகளால் படிக்கப்பட்டது. பிறகு மதுரை பண்டித ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்கள் பிரமேஹ நிதான பஞ்சலக்ஷணியில் திரிதோஷ ஸமன்வயம் என்ற தனது கட்டுரையில் சில பாகங்களைப்பற்றி பேசினார்.

மாலை 2 மணிக்கு பொதுக்கூட்டத்தில் மஹாமண்டலத்தின் உபகார்யதர்சி ஷை P. V ஹரிஹர அய்யர் அவர்களால் வருஷாந்தர அறிக்கையும் வரவு செலவு கணக்கும் படிக்கப்பட்டு ஸபையினரால் அங்கீகரிக்கப்பட்டதும் புதிய நிர்வாஹ ஸமிதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும் பல வைத்ய நண்பர்கள் கூட்டத்தில் பேசினார்கள். ஸ்ரீமான் V R. லக்ஷ்மிகாந்த சர்மா (கும்பகோணம்) அவர்கள் வைத்ய சந்திரிகையை நல்ல

மாதப்பத்திரிகையாக சிரமைப்பதாலேயே மஹாமண்டலத்தின் நிர்வாஹம் சீர்படுமாகையால் அதற்குத் தேவையான நிதி திரட்டுவது அங்கத்தினர்களின் முக்கியமான பொறுப்பாகும் எனக் குறிப்பிட்டு அதற்கு தானும் தனது சில நண்பர்களும் நன்கொடை அளிக்க வாக்களித்ததைக் குறிப்பிட்டார். தலைவர் தனது முடிவுரையில் வைத்யர்கள் இஞ்செக்ஷன் முதலியது கொடுப்பது தகுமா என்ற கேள்விக்குப் பதிலளித்தார். வந்தனோபசாரங்களுடன் மஹாநாடு இனிது முடிவடைந்தது.

இம்மஹாநாட்டை நடத்த இடைவிடாது சொந்த நலன்களையும் பாராது வெற்றிகரமாகவும், இதுவரை நடந்த மஹாநாடுகளைக் காட்டிலும் எல்லா அம்சங்களிலும் சிறப்பாகவும் நடத்திக் கொடுத்த வரவேற்புக் கமிட்டித்தலைவர் ஸ்ரீமான் V. S. கணபதி சாஸ்திரிகள், காரியதர்சிகளில் ஸ்ரீ P. விசுவநாத சர்மா, P. K. ராமையா சாஸ்திரி, S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, உபதலைவர் ஸ்ரீ K வைத்யநாத சாஸ்திரிகள் இவர்கள் மஹாமண்டலத்தின் ஹிருதய பூர்வமான நன்றிக்கு உரித்தாகிறார்கள்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் பொதுக் காரியதரிசி மஹாமண்டலத்தின் 17-வது ஸம்மேளனத்தில் ஸமர்ப்பிக்கும் 1950-52 வருஷங்களின் கார்யக்ரம யாதாஸ்து.

இந்த யாதஸ்தை தங்களுக்கு சமர்ப்பிக்குமுன் இதுவரை என்னுடன் ஒத்துழைத்து மஹாமண்டலத்தின் கார்யங்களை செவ்வனே நிறைவேற்றித்தந்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்ம ரக்ஷாமணி K. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் பதினாறாவது ஸம்மேளனத்தின் இறுதியில் ஸ்ரீரங்கம் Dr. V. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைவராகவும், நான் பொது காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். நமது மண்டலத்திற்கு சென்ற இரண்டு வருஷங்களாக தலைவராக இருந்த நமது Dr. V. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் செய்திருக்கும் சேவைகள் நமது வைத்யத்திற்கே எந்நாளும் கிடைக்கக் கூடாதவை. அவர்கள் M P. ஆக இருக்கிறபடியாலே நாம் இவ்விரண்டு ஆண்டுகளும் அவர்களுடைய தலைமையில் நடக்கவேண்டுமென்று எண்ணி இந்தப் பதினேழாவது மஹாநாட்டை

நடக்கிறது தாமதம் செய்தோம். மத்ய சர்க்கார் ஏற்படுத்தி யிருக்கும் ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகத்தில் நமது சுப்பிரமணிய அய்யர் அவர்களை அங்கத்தினர்களில் ஒருவராக நியமித்திருப்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது. தவிரவும் இந்த இரண்டு வருஷங்களாக ஆயுர்வேத பிரசாரம் வைத்ய சந்திரிகை மூலமாகவும் காரியதரிசியின் சுற்றுப்பிரயாணங்கள் மூலமாகவும் நன்கு நடந்துவந்திருக்கிறது. மண்டல பத்திரிகையான சந்திரிகை தற்பொழுது மிகவும் நல்ல ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கிறது. வருஷாரம்பத்தில் பத்திரிகை நடத்த நிதி வசதி யில்லாமல் காரியதரிசியின் கைப்பணம் ரூபாய் நூறு மண்டலத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. காரியதரிசியும், வைத்ய சந்திரிகை ஆசிரியர் பண்டிட் S. நாராயண அய்யங்கார் அவர்களும், தலைவர் Dr. V. சுப்பிரமணிய அய்யர் அவர்களும் சொந்த செலவில் டில்லியில் நடந்த அகில பாரத ஆயுர்வேத மஹாநாட்டுக்குச் சென்று தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் தீர்மானங்கள் நிறைவேற்றினர். மற்றும் எல்லா அங்கத்தினர்களும், விசேஷமாக திருச்சி ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகளும் பண உதவியும், சமயங்களில் வேண்டிய ஆதரவும் அளித்து மண்டலத்தை நன்கு நடத்த ஒத்துழைத்ததற்கு மண்டலம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. நமது மண்டலத்தின் சேலம் கிளைச் சங்கம் தலைவர் சஞ்சீவியும், காரியதரிசி பழனியப்பாவும் மண்டலத்திற்கு விசேஷ உத்ஸாக மூட்டியுள்ளார்கள். இன்னும் எல்லா கிளைச் சங்கங்களும் நன்கு நடந்து மண்டலம் மேன்மேலும் செழிக்க விரும்புகிறோம்.

இவ்விரண்டு வருஷங்களில் ஏழு ஸ்தாயி ஸமிதிக் கூட்டங்கள் நடைபெற்றன.

முதல் ஸ்தாயி ஸமிதிக்கூட்டம் 1950-ம் வருஷம் ஜனவரி மீ 19-உ இரவு 7 மணிக்கு மயிலை வெங்கட்ரமண கல்லூரியில் நடைபெற்றது. ஸம்மேளனத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பவேண்டிய பொறுப்பையும், இதர மண்டல அலுவல்களையும், பொதுக்காரியதரிசி பண்டிட் P. S. ராமசர்மா அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

இரண்டாவது ஸ்தாயி ஸமிதிக்கூட்டம் 1950-வருஷம் பிப்ரவரி மாதம் 4-உ மாலை 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் நடைபெற்றது. வைத்ய சந்திரிகையின் விசேஷ பிரதிகளின் பாக்கியை எல்லா வைத்தியர்களுக்கும் அனுப்பியும், புதிய சந்தாதாரர்கள் சேர்த்தும், நிதி திரட்டியும், மற்றும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவும், தலைவர் முதல் எல்லோரும் ஒத்துழைக்கும்படி பிரார்த்தித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

டில்லியில் 1950-ம் வருஷம் பிப்ரவரி மீ 19, 20, 21 தேதிகளில் நடந்த அகில பாரத ஆயுர்வேத மஹா சம்மேளனத்திற்கு நமது மண்டலத்தின் பிரதிநிதிகளாக ஸ்ரீரங்கம் Dr. V. சுப்ரமணிய அய்யர், திருச்சி ஆயுர்வேதாச்சார்ய V. B நடராஜ சாஸ்திரிகள் கரூர் பண்டிட் P. S. ராமசர்மா, மதுரை பண்டிட் S. நாராயண அய்யங்கார் முதலியோர் அவர்களுடைய சொந்த செலவில் போய் வர தேர்ந்தெடுக்கப்பட்டனர். டில்லி சம்மேளனத்திற்கு முன்னதாகவே தீர்மானங்களை அனுப்ப பொது காரியதரிசி பண்டிட் ராமசர்மாவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

மூன்றாவது ஸ்தாயி ஸமிதிக்கூட்டம் 1950-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-உ ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் நடைபெற்றது. மண்டலத்தின் அபி விருத்திக்காக வேண்டிய பிரசார வேலையில் ஈடுபடும்படியாக அங்கத்தினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். B வகுப்பு வைத்யர்கள் தங்களிடம் சிகிச்சை செய்துகொள்ளும் நோயாளிகளுக்குக் கொடுக்கும் மெடிகல் சர்டிபிகேட்டுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்கீகரிக்கவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கவும் நமது மாகாணத்தில் அதிகமான ஆயுர்வேத வைத்யசாலைகளை ஏற்படுத்தி அவற்றில் B வகுப்பில் பதிவு செய்யப்பட்ட வைத்யர்களையும் நியமித்து அவர்களுக்கு ரூ. 150 க்குக் குறையாமல் ஆரம்ப சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும், கடைசியாக சுதேச வைத்யர்களிடையே தற்பொழுது இருக்கும் A, B என்ற வகுப்புப் பிரிவினை நீக்கப்படவேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

நான்காவது ஸ்தாயி ஸமிதிக்கூட்டம் 1951-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 29-உ சனிக்கிழமை மாலை 2-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் நடைபெற்றது. தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் பதினேழாவது ஸம்மேளனத்தை புதுக்கோட்டையில் நடத்தும்படி ஸ்ரீமான்கள் விஸ்வநாத சர்மா, வைத்தியநாத சாஸ்திரிகள், ஆகிய இருவரும் சேர்ந்து அனுப்பிய அழைப்பை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு அவ்விதமே ஸம்மேளனத்தை புதுக்கோட்டையில் நடத்தத் தீர்மானிக்கப் பட்டது. அந்த ஸம்மேளனத்தில் சமஸ்கிருதத்தில் "ப்ரமேஹஸ்ய திருதோஷ சமன்வய:" என்ற பொருள் பற்றியும், தமிழில் "ஆமவாதம்" என்ற பொருள் பற்றியும், இரு கட்டுரைப் போட்டிகள் நடத்தவும், அப்போட்டிகளுக்குப் பரிசாக ஒவ்வொன்றும் ரூ 50 மதிப்புள்ள இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டு. அப்போட்டிகளை

நடத்த ஸ்ரீமான்கள் V. R. சுப்பிரமணிய அய்யர், V. B. நடராஜ சாஸ்திரிகள், P. S. ராமசர்மா, A. ராகவ ராவ், S. M. சுந்தர ராஜாச்சாரியார் ஆகிய ஐவடங்கிய ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப் பட்டது.

ஐந்தாவது ஸ்தாயி ஸமிதிக் கூட்டம் 1951-ம் ௵ நவம்பர் மாதம் 17-ௗ சனிக்கிழமை மாலை 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் நடைபெற்றது. பதினேழாவது மஹா சம்மேளனத்திற்கு தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக பிரதிநிதிகளிடமிருந்து வந்த வாக்குச்சீட்டுகளை பரிசீலனை செய்து அதிகமான வாக்குகளைப் பெற்றவர்களான கரூர் பண்டிட் P. S. ராமசர்மா, திருச்சி ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள்; மதுரை பண்டிட் S. நாராயண அய்யங்கார், மயிலை T. V ராதாகிருஷ்ண சாஸ்திரிகள், ஸ்ரீரங்கம் Dr. V. சுப்பிரமணிய அய்யர் ஆகிய ஐவர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வரவேற்புக் கமிட்டிக்கு சிபார்சு செய்யப்பட்டது 1950-51, 1951-52 இவ்வாண்டுகளின் வரவு சிலவுக் கணக்குகளை தணிக்கை செய்ய கரூர் வைத்திய விசாரதா R. V. ராமன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்

ஆறாவது ஸ்தாயி ஸமிதிக்கூட்டம் 1952-ம் ௵ பிப்ரவரி மாதம் 5-ௗ செவ்வாய்க்கிழமை மாலை 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் நடைபெற்றது. தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் பதினேழாவது ஸம்மேளனத்தில் நிறைவேற்றப்படவேண்டிய தீர்மானங்களைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. விஜயவாடாவிலுள்ள மெட்ராஸ் ஸ்டேட் ஆயுர்வேதிக் பார்மஸீஸ் அசோஸியேஷனிலிருந்து அவர்களுடைய மகாநாட்டையும் நமது ஸம்மேளனத்துடன் நடத்த அனுமதிக்குமாறு வந்த வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது.

ஏழாவது ஸ்தாயி ஸமிதிக்கூட்டம் 1952-ம் ௵ பிப்ரவரி மாதம் 22-ௗ வெள்ளிக்கிழமை மாலை 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியனில் நடைபெற்றது. வருகிற மே மாதத்தில் நடக்க இருக்கும் நிகில பாரத ஆயுர்வேத மஹாசபையினுடைய 38-வது மகாநாட்டிலும், ஆயுர்வேத ஸம்மேளனம், ஆயுர்வேத வித்யாபீடம், ஆயுர்வேதிக் பார்மஸீஸ் அசோஸியேஷன் ஆகியவற்றின் மகாநாடுகளுக்கு தலைவர்களைத் தேர்ந்தெடுக்க தனித்தனியே அனுப்பப்பட்ட வாக்குச்சீட்டுகள் பூர்த்திசெய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலம்.

1950—52 வருஷத்திய வரவு சிலவு இருப்புத் திட்ட விவரம். **(18-1-50** முதல் **29-2-52** முடிய)

ஆரம்பக் கையிருப்பு ரொக்கம்	ரூ.	57	6	0
திருசிநி பாங்கில்	ரூ	10	8	8
		67	14	8
அங்கத்தினர்கள் சந்தா	ரூ.	1225	9	0
நன்கொடை	ரூ.	105	0	0
வைத்திய சந்திரிகையின் விளம்பரம் மூலம் வரவு	ரூ.	475	4	0
ஸ்ரீ P. S. ராம சர்மாவிடம் இருந்து சந்திரிகை பிரிண்ட் செய்ய பிரஸ் அட்வான்ஸ் கொடுத்ததில் ஷெயாருக்கு திருப்பி கொடுக்கவேண்டிய தொகை.	ரூ.	200	0	0
	ரூ.	2073	11	8

(Rs. Two Thousand and Seventy Three, Annas Eleven & Eight Pices.)

அகில இந்திய ஆயுர்வேத மஹா மண்டலத்துடன் இணைப்பிற்காக 1952-ம் வருஷ சந்தா	ரூ.	25	0	0
தபால் சிலவு	ரூ.	192	0	9
வைத்திய சந்திரிகை பிரசுரம் செய்ய (1951 டிசம்பர் முடிய)	ரூ	1645	0	0
ஸ்டேஷனரி and இதர வகைகள்	ரூ.	17	6	6
கையிருப்பு ரொக்கம் 183-11—9				
திருசிநி பாங்கில் 10—8—8		194	4	5
		2073	11	8

கணக்குகள் பரிசோதிக்கப்பட்டது.

R. V. Rama Sastri.

For General Secretary,

P. V. Hariharan,

Asst. Secretary

9-3-52.

1952-ஆம் மார்ச்சு-மீ 8, 9 தேதிகளில் நடந்த 17-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹா சம்மேளனத்தின்

பொதுக்கூட்டத்தில், அடியிற்கண்டவர்கள் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கரூர், வைத்ய வாசஸ்பதி, ஸ்ரீ P. S. ராமசர்மா—தலைவர்.
திருச்சி, ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V B. நடராஜ சாஸ்திரி } உப தலை
ஸ்ரீரங்கம் Dr. V சுப்பிரமணிய அய்யர் } வர்கள்.
திருச்சி, வைத்ய விசாரத ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி—காரியதரிசி.

ஷை பொதுக்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் அதிகமாக அங்கத்தினர்களைச் சேர்க்கவும், மஹா மண்டலத்தின் கிளைச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் திட்டங்களை செவ்வனே நிறைவேற்ற தீவிரமாக முயற்சி செய்யவும், தகுந்த ஏற்பாடுகளை செய்யும்படி இந்த மஹாநாடு, தலைவரைக் கேட்டுக்கொள்கிறது

2. ஆஸவாரிஷ்டங்கள் சாராயக் கலப்பில்லாததாலும், போதை தரக்கூடியவை அல்லாததாலும், அவற்றிற்கு 1951-ம் வருஷத்து மதுவிலக்குச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்குமாறு சென்னை அரசாங்கத்தாரை இந்த மஹாநாடு கேட்டுக்கொள்கிறது. சமீப காலத்தில் சென்னை அரசாங்கத்தார் சில யந்தர்கள், வாசனை சாமான்கள் விஷயத்தில் ஷை சட்டத்திலிருந்து விலக்கு அளித்திருப்பதால், அதே காரணத்தைக்கொண்டு ஆஸவாரிஷ்டங்களுக்கும் விலக்கு அளிக்கவேண்டுமென்று கோரப்படுகிறது.

இது சம்பந்தமாக மண்டலத்தின் தலைவருக்கும் பொதுக் காரியதரிசிக்கும் அரசாங்க அதிகாரிகளை சந்திக்கவும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவும், இம்மஹாநாடு அதிகாரமளிக்கிறது.

3. தகுந்த வைத்தியர்கள் கிடைக்காத காரணத்தினால் பல ஜில்லா போர்டுகளால் நடத்தப்பட்டு வந்த ஆயுர்வேத வைத்யசாலைகள் மூடப்பட்டிருப்பதற்கு, இம்மகாநாடு வருத்தம் தெரிவித்துக்கொள்வதுடன் "A" வகுப்பு வைத்தியர்களைப் போலவே "B" வகுப்பு வைத்தியர்களுக்கும் சம அந்தஸ்தும்,

சர்வீஸ் உத்திரவாதமும் அளிக்கப்பட்டால் தேவையான வைத்யர்கள் கிடைப்பார்கள் என்றும், அதே விதம் செய்து "B" வகுப்பு வைத்தியர்களையும் நியமித்து மூடப்பட்ட ஆஸ்பத்திரிகளை மறுபடியும் திறக்குமாறு இந்த மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது

4. 'B' வகுப்பு வைத்தியர்கள் எல்லோரும் 'A' வகுப்பு வைத்தியர்களுக்கு சமமான யோக்யதை பெறுவதற்கு உதவியாக அடுத்த கல்லூரி ஆண்டிலிருந்து A. L. I. M. வகுப்பை ஆரம்பிக்குமாறு இம்மஹாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி வேண்டிய ஏற்பாடுச் செய்யும்படி தலைவரும், காரியதரிசியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5 புதுக்கோட்டை சமஸ்தானம் சென்னை ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டபிறகு, அங்குள்ள ஆயுர்வேத வைத்யர்கள் பதிவு செய்யப்படாவிடில், சட்டப்படி தொழில் நடத்த முடியாமற் போவதால், அவர்கள் பதிவு செய்யப்படுவதற்கு பிரத்யேக வசதிகள் அளிக்கவேண்டுமென்று இம்மஹாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது ஷை விஷயத்தை விவரமாகக் கூறி யுக்தமான யாதாஸ்தை ஒன்றைத் தயாரித்து, அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதற்கு இம்மஹாநாடு கார்யதரிசிக்கு அதிகாரம் அளிக்கிறது.

6. 'B' வகுப்பு ஆயுர்வேத வைத்யர்களின் பதிவுகால சம்பந்தமாக தங்களுடைய தீர்மானத்தை புனராலோசனை செய்து பதிவுகால வரையறையைக் கொஞ்சம் ஒத்திப்போடும்படி சென்னை அரசாங்கத்தாரை இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

7 இந்திய யூனியனில் ஒரு ராஜ்யத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிற ஒரு ஆயுர்வேத வைத்யர் அந்த யூனியனின் மற்ற எந்த ராஜ்யத்திலும் தொழில் நடத்த அனுமதிக்கப்பட வேண்டுமென்று இந்த மஹாநாடு மத்திய அரசாங்கத்தாரையும், மாகாண அரசாங்கத்தாரையும் கேட்டுக்கொள்கிறது.

8 ஆகாரத்திற்கும், மருந்துகள் தயாரிப்பதற்கும் உபயோகமாகிற மிளகு, இஞ்சி, சுக்கு, வெள்ளைப் பூண்டு முதலிய முக்கிய பண்டங்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாவதை உடனடியாகத் தடுக்கவேண்டுமென்று இந்த மஹாநாடு மத்ய அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்கிறது.

9. ஆயுர்வேத மருந்துகளை அபிவிருத்தி செய்யும், அவற்றின் விலை வாசிகளைக் கட்டுப்படுத்தவும், இந்திய யூனியன் முழுமைக்கும் ஒரு திட்டத்தை வகுக்க தனிப்பட்ட மத்ய ஆயுர்வேத வைத்யக் கவுன்சில் ஒன்றை அமைக்கும்படி மத்ய அரசாங்கத்தாரையும் ராஜ்ய அரசாங்கத்தாரையும் இந்த மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

10. ஒவ்வொரு ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியிலும் ஆயுர்வேத வைத்ய முறைபடி சிகித்சை செய்ய தனிவார்டு ஏற்படுத்தி அதற்கு ஆயுர்வேத வைத்யர்களை நியமிக்கும்படி இந்த மஹாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

11. அதன் வளத்தினாலும், அங்கு சோழ மன்னர்களுடைய அரண்மனையில் 'சரஸ்வதி மஹால்' புத்தக சாலையில் ஆயுர்வேத சித்த வைத்ய முறைகள் சம்பந்தமான சிறந்த நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் இருப்பதாலும், ஆராய்ச்சி நடத்தத் தகுதியுள்ள தஞ்சாவூரில், ஒரு ஆயுர்வேத மருந்து ஆராய்ச்சிக் கழகத்தை ஏற்படுத்தும்படி, மத்திய அரசாங்கத்தை இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.

17 சின்னக்கடைத் தெரு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

199599

வைத்தியர்களுக்கு

சாஸ்திரிய மருந்துகளும் மிகக் குறைந்த

விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மதராஸ் ஸ்டேட், இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ்
கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,
X 185, லேட்டிஸ்பிரிட்ஜ் ரோட், அடையாறு, மதராஸ்.

பிரஸிடெண்ட்: வைத்யரத்ன கேப்டன் G. ஸ்ரீனிவாசமூர்த்தி.
பி. ஏ. பி. எல். எம். பி. ஸி. எம்.

அறிக்கை,

1. ஆயுர்வேத சித்த, யூனானி தேசிய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல்பார்வையுடனும் தயார் செய்து தேசிய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ப்ரொவின்ஷியல் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்

2. தேசிய இந்திய டாக்டர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசிய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மெம்பராக சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேசக் கட்டணம் பங்கு 1-க்கு 4 அணா கட்டவேணும். ஒரு மெம்பர் 1000 பங்குவரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4. மேற்கண்ட சொஸைட்டியின் நடந்த 3 வருஷத்தில் லேவாதேவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது

		1495-46	1946-47	1947 48
1	மெம்பர்கள் (தேசிய டாக்டர்கள்)	261	364	442
2.	பங்குத் தொகை	12,985	14 135	16 160
3.	மருந்து விற்பனை	68 589	1 15 683	1,38 348
4.	லாபம்	6 000	15 085	40 522
5.	பங்குக்கு வட்டி பைலாவில் ஏற்பட்டபடி)	5%	5%	5%
6	மருந்து வாங்கியதின் பேரில் லாபம்	1 ரூபாய்க்கு 1 பை வீதம்.	1 ரூபாய்க்கு 4 பை வீதம்.	1 ரூபாய்க்கு 6 பை வீதம்

5. தேசிய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வை. கோண்டல்ராவ்,
காரியதரிசி.

V. P. A.

"சக்தி [illegible]ந்சீவி"

(REGD.)

MADRAS

டிரேட் மார்க்

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா

அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்.

குழந்தைகளுடைய சால் குலைக் கட்டிகளை எளிதிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்!

தயாரிப்பவர் :—

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர். (S. Ry.)

Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press. Karur.